# கன்மலையிலிருந்து தண்ணீர் வருதல் (எண்ணா 20,21)

நீங்கள் எப்போதாவது உங்கள் துணைவரிடமோ,அல்லது நண்பரிடமோ எதை பற்றியாவது குறை சொல்லியது உண்டா? இப்படி குறைகூறும் சுபாவம் உங்கள் கலாச்சாரத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளதா? குறை கூறுதல் ஏதாவது நல்ல மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளதா? இன்றைய தினத்தின் பாடத்தில் குறை சொல்லுவதால் உண்டாகும். அபாயத்தையும்,தேவன் அதை எவ்வளவு தீவிரமாக எடுத்துக் கொள்கிறார் என்பதையும் பார்ப்போம்.

கிட்டதட்ட 40 வருடங்கள் அலைந்து திரிந்த பின்பு இஸ்ரவேல் ஜனங்கள் காதேஸ் என்ற இடத்திற்கு பின்புறம் உள்ள சீன வனாந்திரத்திற்கு வந்து சேர்ந்தனர்.

அங்கு தண்ணீர் இல்லை. அங்கே மீரியாம் மரித்து அடக்கம் செய்யப்பட்டாள். ஜனங்கள் ஒன்று சேர்ந்து மீண்டும் மோசேக்கு எதிராக 'நாங்களும் எங்கள் பிதாக்களை போலவும் சகோதரர்களைப் போலவும் மரித்து போயிருந்தால் நலமாயிருக்கும். நாங்களும் எங்கள் மிருக ஜீவன்களும் மரித்து போகும்படி இந்த தேவனுடைய ஜனங்களை ஏன் வனாந்திரத்திற்கு கொண்டு வந்தீர்? இந்த பயங்கரமான இடத்திற்கு கொண்டு வரும்படியாகவா எங்களை எகிப்து தேசத்திலிருந்து கொண்டு வந்தீர்? இங்கே தானியங்களோ, அத்திபழங்களோ,திராட்சை பழ வகைகளோ அல்லது மாதுளம் பழங்களோ இல்லை என சண்டையிட்டனர்.

இந்த கலக குணமுள்ள சந்ததியினர் தங்கள் பிதாக்களைப் போல சாக விரும்பினார்கள்.

மோசேயும்,ஆரோனும் தேவனை சந்திக்கும் இடமான ஆசரிப்பு கூடாரத்துக்கு சென்று முகங்குப்புற விழுந்தார்கள். தேவனுடைய மகிமை இறங்கியது.

தேவன் மோசேயிடம், ’நீ உன் கையில் உள்ள கோலை எடுத்து கொண்டு உன் சகோதரனாகிய ஆரோனை அழைத்து கொண்டு இந்த ஜனங்களை கூட்டமாக சேர்த்து அவர்கள் கண்களுக்கு முன்பாக இந்த மலையோடு பேசு அப்பொழுது அதினிடத்திலிருந்து தண்ணீர் புறப்பட்டு வரும். இந்த ஜனங்களும் அவர்கள் மிருக ஜீவன்களும்

குடிக்கும்படியாக இந்த மலையிலிருந்து தண்ணீர் கொண்டு வா என்றார்.

உடனே மோசே கர்த்தருடைய சமுகத்தில் இருந்த தன்னுடைய கோலை எடுத்துக் கொண்டு அந்த ஜனங்களை மலைக்கு முன்பாக கூட்டிச் சேர்த்தான். மோசே அவர்களிடம் 'கலககார ஜனங்களே கேளுங்கள். நாங்கள் இந்த மலையிலிருந்து தண்ணீர் கொண்டு வர வேண்டுமா? என்று சொல்லி தன் கரங்களை உயர்த்தி தன் கோலால் மலையை இரண்டு தரம் அடித்தான்.

நாற்பது வருடங்களில் காணப்பட்ட கோபம் மற்றும் விரக்தி வார்த்தைகளாக வெளிப்பட்டது. தண்ணீர் புறப்பட்டு வந்தது. அது அந்த ஜனங்களுக்கும் மிருக ஜீவன்களுக்கும் குடிக்க போதுமானதாக காணப்பட்டது.

மோசேயும்,ஆரோனும் தேவனை பிரியப்படுத்தவில்லை. எனவே தேவன், நீங்கள் என்னை நம்பவில்லை, என்னை கனம்பண்ணாமலும் இந்த ஜனத்திற்கு முன்பாக என்னை பரிசுத்தம் பண்ணாமலும் போனீர்கள். நீங்கள் இந்த ஜனத்தை நான் கொடுக்கும் தேசத்திற்கு அழைத்து செல்லவில்லை என அவர்களை கடிந்து கொண்டார்.

மேரிபாவின் தண்ணீர்களிடத்தில் கலகம் செய்தது போல இங்கும் கலகம் பண்ணினார்கள். அவர்கள் நிமித்தம் மோசே தேவனை நம்பாதது போல மனம்பதறி பேசினான். மோசேயின் கோபமான செயல்கள் தேவனை துக்கப்படுத்தியது. (சங் 106:33).

இஸ்ரவேல் ஜனங்கள் பிரயாணம் பண்ணி எதோம் தேசத்தின் எல்லை மட்டும் வந்தார்கள். மோசே அந்த தேசத்தின் இராஜாவினிடத்திற்கு ஒரு ஆளை அனுப்பி அவர்களை தேசத்தின் வழியாக கடந்து செல்ல உத்தரவு கேட்டான்.

இந்த எதோம் தேசத்தின் குடிகள் யாக்கோபின் சகோதரனான ஏசாவின் வம்சவழியில் வந்தவர்கள் . இந்த யாக்கோபின் பெயர் தான் இஸ்ரவேல். மோசே அந்த ராஜாவுக்கு இந்த இஸ்ரவேல் ஜனங்கள் அவர்களை தொந்தரவு பண்ணமாட்டார்கள் மற்றும் அவர்கள் கிணற்றிலிருந்து தண்ணீர் குடிக்கமாட்டார்கள் என்றும் கூறி கடந்து போக மட்டும் உத்தரவு கேட்டான்.

ஆனால் அந்த கர்வம் பிடித்த அரசன் அனுமதிதரவில்லை. இஸ்ரவேலர் அவர்களுடைய நெருங்கிய உறவினர்களாக காணப்பட்டும் கடந்து போக அனுமதிக்கவில்லை.

அவன் பெரிய பலமான படையை அவன் நாட்டின் எல்லைப் பகுதியில் அனுப்பி அவர்கள் தேசத்தின் வழியாக கடந்து போகாதபடி மிரட்டினான். எனவே மோசேயும், இஸ்ரவேலரும் விலகி திரும்பி போனார்கள்.

சில நாட்களுக்கு பிறகு இஸ்ரவேலர் ஓர் என்ற மலைக்கு வந்தனர். கர்த்தர் மோசேயிடம் நீங்கள் இருவரும் என்னுடைய கட்டளைக்கு எதிர்த்து நின்றபடியால் ஆரோன் மரணமடைய போகிறான் . எனவே ஆரோனையும் அவன் குமாரன் எலியேசரையும் ஓர் என்ற மலைக்கு கூட்டி கொண்டு போ. அங்கு பிரதான ஆசாரியனுக்குரிய வஸ்திரத்தை அவனிடமிருந்து கழற்றி அவனுடைய மகனுக்கு போடு' என்றார். மோசே எல்லா மக்களுடைய கண்களுக்கு முன்பாக அப்படியே செய்தான்.

அதின் பின்பு சீக்கிரமாகவே ஆரோன் மரித்து போனான். ஆரோனுக்கு அடுத்தபடியாக யார் பிரதான ஆசாரியனாக வருவார்கள் என்றே சந்தேகத்துக்கு இடமில்லாமல் தேவனே எலியேசரை அடுத்த பிரதான ஆசாரியனாக்கினார்.

இஸ்ரவேல் ஜனங்கள் ஆரோன் மரித்ததிற்காக 30 நாட்கள் துக்கம் கொண்டாடினார்கள். மோசேதான் இப்பொழுது இஸ்ரவேலரில் மிகவும் வயதான நபராக காணப்பட்டார்.

இஸ்ரவேல் ஜனங்கள் ஏதோமை சுற்றி நடந்த போது அவர்கள் மிகவும் பொறுமையை இழந்து முறுமுறுக்க தொடங்கிவிட்டனர். அவர்கள் தேவனுக்கு விரோதமாகவும்,மோசேக்கு விரோதமாகவும் “நீங்கள் எங்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்து கொண்டு வந்தது. இந்த வனாந்திரத்தில் சாவதற்காகவா? இங்கு அப்பமும் இல்லை. தண்ணீரும் இல்லை இந்த அற்பமான உணவை வெறுக்கிறோம” என்று கூறினர்.

வானத்தின் அப்பமாகிய மன்னாவை குறித்து பிதாக்கள் முறுமுறுத்தது போல இப்பொழுது பிள்ளைகளும் முறுமுறுத்தனர்.

இதின் விளைவாக தேவன் கொள்ளி வாய் சர்ப்பங்களை அவர்கள் பாளயங்களுக்குள் அனுப்பினார். அவைகள் அவர்களை கடித்ததினால் அநேகர் இறந்தனர்.

ஜனங்கள் அழுது கொண்டு மோசேயிடம் விரைந்து வந்து 'நாங்கள் பாவம் செய்தோம் . உமக்கு விரோதமாகவும் தேவனுக்கு விரோதமாகவும் பேசினோம். தேவன் இந்த சர்ப்பங்களை எங்களை விட்டு அனுப்பும் படி ஜெபியுங்கள்' என்றனர். ஆகவே மோசே ஜனங்களுக்காக ஜெபித்தான்.

தேவன் மோசேயிடம் 'ஒரு வெண்கல சர்ப்பத்தின் உருவத்தை செய்து அதை கோலின் மேல் உயரமாக வைக்க வேண்டும். அதை பார்க்கும், சர்பத்தினால் கடிக்கப்பட்ட ஒவ்வொருவரும் பிழைப்பார்கள் என்று அறிவுறுத்தினார்.

அப்படியே மோசே,ஒரு வெண்கல சர்பத்தை உண்டாக்கி அதை ஒரு கம்பத்தின் மேல் தூக்கி வைத்தான். சர்ப்பம் ஒருவனை கடித்த போது அவன் அந்த வெண்கல சர்ப்பத்தை நோக்கி பார்த்து பிழைத்தான்.

இயேசுவானவர் எப்படி சிலுவையில் மரிக்க போகிறார். என்பதற்கு இது அடையாளமாக உள்ளது. அவரை விசுவாசிக்கிறவர்கள் நித்திய ஜீவனை அடைவார்கள் (யோவா 3:14-15)

ஜனங்கள் இவ்வாறு பிரயாணப்பட்டு வருகையில் எமோரியாவின் எல்லை பகுதிக்கு வந்தார்கள். தாங்கள் அந்த தேசத்தின் வழியாக செல்லலாமா? என்று ஒரு ஆளை அனுப்பி அந்த ராஜாவிடம் கேட்டனர். அந்த எமோரியாவின் ராஜாவாகிய சீகோனிடம் தாங்கள் எந்த பொருளையும் எடுத்துக கொள்ள மாட்டோம் மற்றும் கிணற்றிலுள்ள தண்ணீரையும் குடிக்க மாட்டோம் என்று உறுதியாக கூறினர்.

ஆனால் எமோரியரின் ராஜா இஸ்ரவேலரை அவர்கள் தேசத்தின் வழியாக கடந்து போக அனுமதிக்கவில்லை. அது மட்டுமல்லாமல் ஒரு படையை அனுப்பி அவர்களை தாக்கினான். ஆகவே ஜனங்கள் அவர்களை எதிர்த்து சண்டை போட்டு தேவனின் உதவியால் அவர்களை முற்றிலுமாக தோற்கடித்தனர்.

அவர்கள் பட்டணங்களை எல்லாம் பிடித்து அவைகளில் குடியேறினார்கள்.

அவர்கள் அம்மோனியர்கள் எல்லை மட்டும் எமோரியரின் தேசத்தின் வடக்கே உள்ள இடங்களை கட்டுபாட்டிற்குள் கொண்டு வந்தனர்.

இந்த பாடம் மிகவும் முக்கியமானது ஏனென்றால் தேவனுடைய பிள்ளைகளுக்கு விரோதமாக முறுமுறுத்தல் மற்றும் புகார் கூறுதல் போன்ற பாவங்களால் ஏற்படும் பின் விளைவுகளைப் பற்றி குறிப்பிடுகிறது.

இது உங்கள் சூழ்நிலையை முன்பு இருப்பதை விட மோசமாக்கும்.

இதற்கு தீர்வு தேவன் தன்னுடைய ஜனங்களை ஆசிர்வதித்து, அவர்களை செழிக்கச் செய்வார் என்று நம்புவதே ஆகும். இந்த பாடத்தின் முக்கியமான சத்தியம் என்னவென்றால் கிறிஸ்தவர்கள் தேவன் தங்களை வைத்திருக்கிற இடத்திலுள்ள தலைவர்களையோ அல்லது சூழ்நிலைகளையோ பற்றி முறுமுறுக்கும் போது,தேவன் அதில் பிரியமாயிருக்கமாட்டார் என்பதே.

இந்த பாடத்தை திரும்பி பார்க்க பின்வரும் கேள்விகளுக்கு பதில் அளிக்கவும்.

1. ஏன் தேவன் மோசேயை வாக்குதத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் பிரவேசிக்க அனுமதிக்கவில்லை? (5 நொடிக்குள் நிற்க)

   ‘ மோசே தேவனை முழுமையாக நம்பாமலும் ஜனங்களுக்கு முன்பாக கனம் பண்ணாமலும் இருந்தான் பதில் சரி.

2. ஜனங்கள் முறுமுறுத்த போது என்ன நடந்தது? ( 5 நொடிக்குள் நிற்க)

   ‘தேவன் அவர்கள் பாளையங்களுக்குள் கொள்ளிவாய் சர்ப்பங்களை அனுப்பினார் அவைகள் கடித்ததால் அநேகர் மரித்தனர்’ (சரியான பதில்)

3. இந்த வாதைக்கு பிழைக்க ஜனங்கள் என்ன செய்ய வேண்டும்? (5 நொடிக்குள் நிற்க)

   ‘ஜனங்கள் வெண்கல சர்ப்பத்தை பார்த்தால் குணமடைந்து பிழைப்பார்கள் (சரியான பதில்).

இதில் உங்களுக்கான வீட்டுப்பாடம் என்னவென்றால், குறைந்தது மூன்று முறையாவது இந்தக் பாடத்தைக் கேளுங்கள். நீங்கள் இந்தக் பாடத்தை கேட்கும் போது இது எப்படி நடத்திருக்கும் என்று உங்கள் மனதில் கற்பனை செய்து பாருங்கள். நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ளக் கூடிய அளவிற்கு உங்கள் சொந்த வார்த்தையிலே திரும்ப சொல்லுங்கள்.

பாடத்தை திரும்ப திரும்ப கேட்டு சொல்லிப் பாருங்கள். நீங்கள் சரியாக சொல்லுகிறீர்கள் என்ற நம்பிக்கை உங்களுக்குள் வரும் வரைக்கும் சொல்லிப் பழகுங்கள். அதற்காக 45 நிமிடம் ஒதுக்கி கற்றுக் கொள்ளுங்கள்.

இந்த பாடத்தை ஒரு நபரிடம் கூறிய பின்னர் குறைகூறும் போது நமக்கு என்ன நடக்கும். யாரை பற்றியோ எந்த விஷயத்தை பற்றியோ புகார் தெரிவிக்கும் போது நமக்கு என்ன நடக்கும் என்று கேட்கவும். இந்த நாட்களில் தேவன் எவ்வாறு குறை கூறுகிறவர்களை தண்டிக்கிறார் என்று கவனித்து பாருங்கள்.

பாடம் முடிந்தது